(11)

237242

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் வடிகால் சேவைகள் சபை (திருத்தச்) சட்டம்

---

*[1992, மார்ச் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1992, மார்ச் மாதம் 13 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

*விலை : ரூபா 1.20* *தபாற் செலவு : ரூபா 1.00*

237242

# 1992 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் வடிகால் சேவைகள் சபை (திருத்தச்) சட்டம்

[1992, மார்ச் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ —ஓ. 40/90

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் வடிகால் சேவைகள் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1\. இச்சட்டமானது, 1992 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் வடிகால் சேவைகள் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2\. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும், 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் வடிகால் சேவைகள் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவானது இடப்படுகின்றது :

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல் வடிகால் சேவைகள் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"பொது நிலக் குழாய்கள்.

25\. ஓர் உள்ளூர் அதிகாரசபையின் இடப்பரப்பின் நிருவாக எல்லைகளினுள் குறிக்கப்பட்ட இடமொன்றில் பொது நிலக் குழாய்களை நிறுவும்படி சபையை அத்தகைய உள்ளூர் அதிகாரசபை தேவைப்படுத்தும்போதெல்லாம் சபையானது அத்தகைய நிலக் குழாய்களை அமைத்தல் வேண்டுமென்பதுடன் வேண்டுகோளைச் செய்த உள்ளூர் அதிகாரசபையிடமிருந்து அத்தகைய அமைத்தலுக்கு உறப்பட்ட செலவுகளை அறவிடுதலும் வேண்டும். சபையானது வேண்டுகோளைச்செய்த உள்ளூர் அதிகாரசபையிடமிருந்து அத்தகைய நிலக் குழாய்களினால் வழங்கப்படும் நீர்தொடர்பான நீர் விதிப்பனவுகளையும் அறவிடுதல் வேண்டும்.".

3\. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

"குழாய் அமைப்பு வடிகால் சேவைகள் தொடர்பாக இசைவுச் சான்றிதழ் விதித்துரைத்தல்.

25அ. (1) இப்பிரிவானது நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் அல்லது வளவுகள் எவையும், சபையினால் விதித்துரைக்கப்பட்ட தேவைகளுக்கு கட்டிடத்தின் உள்ளக குழாய் அமைப்பு வடிகால் சேவைகளும் அமைந்திருக்கின்றதெனும் பயன்படும் சான்றிதழொன்று அது தொடர்பில் வழங்கப்படும்வரை கவனிப்பாளர் ஒருவரால் அவ்வாறு இருப்பாட்சி செய்யப்படுதல் ஆகாது.

(2) ஏதேனும் கட்டிடத்தை நிறுவிய ஆள் எவரும் அத்தகைய சான்றிதழுக்காக, சபைக்கு எழுத்தில் விண்ணப்பிக்கலாம். சபையானது, அது அவசியமான தென கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்னர், விண்ணப்பமானது கிடைக்கப்பெற்று இருபத்தொரு நாட்களினுள், ஒன்றில் சான்றிதழை வழங்குதல் வேண்டும் அல்லது அது மறுக்கப்பட்டதையும் அத்தகைய மறுத்தலுக்கான ஏதுவையும் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவை மீறி ஏதேனும் கட்டிடத்தில் அல்லது வளவுகளில் இருப்பாட்சிசெய்யும் அல்லது இருப்பாட்சி செய்ய அனுமதிக்கப்படும் ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மீறுகையானது தொடருகின்ற ஒவ்வொரு நாளிற்கும் இருநூற்றைம்பது ரூபாவினை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவானது "காலை எட்டு மணிக்கும் மாலை ஐந்து மணிக்குமிடையில்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "காலை ஆறு மணிக்கும் மாலை ஆறு மணிக்குமிடையில்" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 27அ எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"அதிகாரமளிக்கப்படாத இணைப்புக்கள் தொடர்பாக பொது முகாமையாளருக்குள்ள தத்துவம்.

27அ. (1) பொது முகாமையாளர் அல்லது அதற்கென அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எவரும், ஏதேனும் கட்டிடத்தின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு ஒரு மணித்தியாலத்திற்குக் குறையாத அறிவித்தல் கொடுத்தபின்னர், இச்சட்டத்தின்கீழ் நீர் வழங்கப்படும் அல்லது வழங்கப்படாத ஏதேனும் கட்டிடத்தினுள் அல்லது வளவுகளிலிருந்து காலை ஆறு மணிக்கும் மாலை ஆறு மணிக்குமிடையில், அங்கு ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத நீர் இணைப்புக்கள் உள்ளனவா எனக் கண்டறிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சோதனையைச் செய்வதற்காக உட்புகலாம்.

(2) நியாயமான காரணமின்றி—

(அ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கத்திற்காக, பொது முகாமையாளரை அல்லது அவரால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் நுழைவதை மறுக்கின்ற :

(ஆ) அத்தகைய பொது முகாமையாளரை அல்லது ஆளை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவர்மீது சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிவதினின்றும் தடுக்கின்ற,

ஆள் எவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபா குற்றப்பணம் ஒன்றிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) சோதனை செய்ததன்பேரில், அத்தகைய கட்டிடத்திற்கு அல்லது வளவுக்கான நீர் விநியோகமானது அதிகாரமளிக்கப்படாத இணைப்பொன்றிலிருந்து வழங்கப்படுகின்றதென, பொது முகாமையாளரினது அல்லது அதற்கென அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினது திருப்திக்கு நிரூபிக்கப்பட்டால், அப்போது அத்தகைய பொது முகாமையாளர் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆள், வளவுகளின் சொந்தக்காரருக்கு அவரது ஆட்சேபனைகளைக் கூறுவதற்கு வாய்ப்பொன்று அளித்தபின்னர், அத்தகைய இணைப்பை அகற்றப்பண்ணுவித்தல் வேண்டும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது "நூறு ரூபாவுக்கு மிகாத" எனும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது, "இருபது ரூபாவுக்கு மிகாத" எனும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவுக்கு விஞ்சாத" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவானது "ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத" எனும் சொற்களுக்குப் பதிலாக, "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப் பிரிவினை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலம் ;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத" எனும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்,

"(2) தீயை அணைக்கும் நோக்கம் தவிர்ந்த வேறு ஏதேனும் நோக்கத்திற்காக நியமைப்புக் கருவியிலிருந்து நீரைப் பயன் படுத்தும் ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியா தல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான விளக் கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதது மான குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவானது "நூறு ரூபா வுக்கு மிகாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக் குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததும்" எனும் சொற் களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவானது "நூறு ரூபா வுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக, "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ் சாததுமான குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும்" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவினை அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலம் ;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "காலை எட்டு மணிக்கும் மாலை ஐந்து மணிக்குமிடையில்" எனும் சொற் களுக்குப் பதிலாக "காலை ஆறு மணிக்கும் மாலை ஆறு மணிக்கு மிடையில்" எனும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவினை உடன டுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலம் :—

"(2) ஓராம் உட்பிரிவினால் அத்தகைய பொது முகாமை யாளர், அவரது முகவர்கள், வேலையாட்கள் மீது சுமத்தப்பட் டுள்ள தத்துவங்களைப் பிரயோகிப்பதில் பொது முகாமையா ளரை அல்லது அவரது முகவர்களை அல்லது வேலையாட்களைத் தடுக்கும் அல்லது தடைசெய்யும் ஆள் எவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்ன ரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு விஞ்சாததுமான குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "ஐம்பது ரூபாவுக்கு மீறுத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத" எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) "இறுதியாகக் கூறப்பட்ட அத்தகைய வேறு (ஒருநாளுக்குமேற் படத்) தொடருமாயின் அவ்வாறு தொடருகின்ற ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபா மேலதிகக் குற்றப்பணத்திற்கும்" எனும் சொற்களுக்குப் பதிலாக "இறுதியாகக் கூறப்பட்ட அத்தகைய வேறு (ஒரு நாளுக்கு மேற்படத்) தொடருமாயின் அவ்வாறு தொடருகின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஐநூறு ரூபா மேலதிகக் குற்றப்பணத்திற்கும்" எனும் சொற்களை இடுவதன் மூலமும்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஆயிரம் ரூபாவுக்கு விஞ்சாத குற்றப்பணத்திற்கும்" என்பதிலிருந்து அப்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்கு குறையாதும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணத்திற்கும் சபையின் பொது முகாமையாளரினல் அல்லது பொது முகாமையாளரினல் எழுத்தில் அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பெற்ற எவரேனும் ஆளினல் ஒப்பமிடப்பட்ட எழுத்திலான அறிவித்தலொன்று அத்தகைய எவரேனும் ஆள் மீது விடுக்கப்பட்டதன்பின்னர் இருபத்திநாலு மணித்தியாலங்கள் முடிவடைந்ததன்பின்னர் அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபா மேலதிக குற்றப் பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்" எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலம்:—

"(3) பொது முகாமையாளரை அல்லது அது தொடர்பாக எழுத்தில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எவரையும் (2) ஆம் உட்பிரிவின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிப்பதினின்றும் தடைசெய்கின்ற அல்லது தடுக்கின்ற ஆள் எவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானெருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மேல் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவானது "நூறு ரூபாவுக்கு விஞ்சாத" என்பதிலிருந்து அப்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்திற்கும் அத்துடன் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றின் விடயத்தில், அதற்கான குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படுகின்ற ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவுக்கு மேற்படாத மேலதிகக் குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்" எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு அப்பிரிவின் முதலாம் உட்பிரிவில் "நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப் பணத்திற்கும்" என்ற சொற்கள் தொடங்கி அப்பிரிவின் இறுதி வரையிலும் உள்ள சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கும் அத்துடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் விடயத்தில் அவ்வாறான தவறு புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவை விஞ்சாத மேலதிக குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவில் "நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபா விஞ்சாத குற்றப்பணத்துக்கும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவில் "இருநூற்றி ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்துக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு அப்பிரிவின (2) ஆம் உட்பிரிவில் "நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்துக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு அப்பிரிவின் (11) ஆம் உட்பிரிவில் "ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்துக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "நூறு ரூபாவுக்கு மிகாத குற்றப் பணத்துக்கு" என்ற சொற்கள் தொடக்கம் அவ்வுட்பிரிவின் இறுதி வரையில் உள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கும் அத்துடன் அவ்வாறாக மறுப்பதில் விடாப்பிடியாக நிற்கின்ற அல்லது அவ்வாறான வேலையை நிறைவேற்றுவதைத் தொடர்ந்தும் தடுக்கின்ற அத்தகைய ஒவ்வொரு சொந்தக்காரரும் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் குற்றம் தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணம் ஒன்றுக்கு ஆளாதல் வேண்டும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் "நூறு ரூபாவுக்கு குற்றப்பணத் திற்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் ''நூறு ரூபாவுக்கு மிகாத ஒரு குற்றப்பணத்திற்கு" என்ற சொற்கள் தொடங்கி உள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு; அத்துடன் அவ் வாறாக மறுப்பதில் விடாப்பிடியாக நிற்கின்ற அல்லது அவ்வாறான வேலையை நிறைவேற்றுவதைத் தொடர்ந்து தடுக்கின்ற அத்தகைய சொந் தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன் மேல் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றுக்குக் குற்றவாளியா தல் வேண்டும் என்பதுடன் முற்கூறியவாறு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் தொடர்ந்து தவறு புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் நாலாம் உட்பிரிவில் "ஐம்பது ரூபாவுக்கு மிகாத" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ் சாத" என்ற சொற்களை இடுவதன் மூலமும்,

(2) அப்பிரிவின் ஆறும் உட்பிரிவில் "ஐம்பது ரூபாவுக்கு மிகாத" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ் சாத" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு அப்பிரிவின் இரண் டாம் உட்பிரிவின் "நூறு ரூபாவுக்கு மிகாத" என்ற சொற்களுக்குப் பதி லாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்துக்கும்" என்ற சொற்களிலிருந்தும் அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற் களுக்கும் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தா யிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் அதன்பேரில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்பின் அவ்வாறான தவறுகளைத் தொடரும் அல்லது அவ்வாறான அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதை அசட்டைசெய்வதைத் தொடர்ந்து மேற்கொள்ளும் அத்தகைய ஒவ்வோர் ஆளும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் முற்கூறியவாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் தொடர்ந்து தவறு புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் "ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்துக்கு" என்ற சொற்கள் தொடங்கி அப்பிரிவின் இறுதி வரையிலும் உள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்துக்கு அத்துடன் அதன் பேரில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அவ்வாறான அத்தாட்சிப் பத்திரத்தை அல்லது அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் முற்கூறிய சுகாதாரக் கருவிகளைப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்தச்செய்யும் அல்லது பயன்படுத்த விடும் ஒவ்வோர் ஆளும் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் முற்கூறியவாறு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் தொடர்ந்து தவறு புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்." என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "ஐம்பது ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்துக்கு" என்ற சொற்கள் தொடங்கி அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அத்துடன் அவ்வாறான மீறுதல்களைத் தொடர்ந்து புரியும் ஒவ்வோர் ஆளும் அதன்பேரில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் தொடர்ந்து புரியப்படும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் முற்கூறியவாறு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் தொடர்ந்து தவறு புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்." என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஓராயிரம் ரூபாவுக்கு மிகாத குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியல் ஆகிய இரண்டிற்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்திற்கு அல்லது அவ்வாறான மறியற்றண்டனை, குற்றப்பணம் இரண்டிற்கும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது அவ்வாறான சிறைத்தண்டனை குற்றப்பணம் இரண்டிற்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்திற்கு அல்லது அவ்வாறான மறியற்றண்டனை, குற்றப்பணம் இரண்டிற்கும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்திற்கு அல்லது அவ்வாறான மறியற்தண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவை நீக்குதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய விதவரிகளும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "நிர்ணயிக்கக்கூடியவாறான, மானியால் விநியோகிக்கப்பட்ட நீருக்கான விதிப்புகளை உள்ளடக்கிய அவ்வாறான விதவரிகளும் விதிப்புகளும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் ஆறும் உட்பிரிவை விட்டுவிடுவதன் மூலம்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் பிரிவுகள் 84அ, 84ஆ, 84இ, 84ஈ, 84உ, 84ஊ, 84எ, 84ஏ, 84ஐ எனப் பயனுடையதாதலும் வேண்டும்:—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84அ தொடக்கம் 84ஐ வரையிலான புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

"சபையால் வழங்கப்படும் நீர் மானி மூலமானதாயிருத்தல்.

84அ. ஏதேனும் கட்டிடத்துக்கு அல்லது இடத்திற்கு விநியோகிக்கப்படும் நீர், மானி மூலமானதாக இருக்க வேண்டும் எனத் தேவைப்படுத்தச் சபை உரித்துடையதாதல் வேண்டும். அத்துடன் சபையால் விநியோகிக்கப்படும் நீருக்கான விதிப்புகளை பிரிவு 84 (1) இன் ஏற்பாடுகள் உள்ளடக்குதல் வேண்டும்.

மானிகளால் விநியோகிக்கப்படும் நீருக்கான விதிப்புகள்.

84ஆ. (1) ஏதேனும் கட்டிடத்திற்கு அல்லது இடத்திற்குச் சபையால் விநியோகிக்கப்படும் நீர் தொடர்பாக அறவிட வேண்டிய விதிப்புகளை மதிப்பிடும் நோக்கத்திற்கென அவ்வாறு நீர் விநியோகிக்கப்படும் ஏதேனும் கட்டிடத்தில் அல்லது இடத்தில் சபை நீர்மானிகளை அமைத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் கட்டிடத்தில் அல்லது இடத்தில் சபையால் நீர்மானி ஒன்று அமைக்கப்பட்டிருந்தால், அத்தகைய கட்டிடத்திற்கு அல்லது இடத்திற்கு கொடுப்பனவு இல்லாமல் நீர்வழங்கற் சபை பொறுப்பேற்ற கடப்பாடு எதனையும் கவனத்தில் கொள்ளாது அத்த

கைய கட்டிடத்தின் அல்லது இடத்தின் குடியிருப்பாளர், மானிமூலம் நீர் வழங்குவதற்கெனப் பாகம் VI இன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள வீதவரிகளுக்கும் விநியோகிக்கப்பட்ட நீருக்கும் பணம் செலுத்துவதற்காளாதல் வேண்டும்.

நீர்மானிகள் அமைக்கப்படுவதைத் தடைசெய்தல் ஒரு தவறுதல்.

84இ. ஏதேனும் கட்டிடத்தில் அல்லது இடத்தில் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட சபையின் ஓர் அலுவலர் ஒரு நீர்மானி அமைப்பதை நியாயமான காரணமின்றித் தடைசெய்யும் அல்லது எதிர்க்கும் ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவான் ஒருவர் முன்னிலையிலான விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

நீர்மானி பழுது பார்க்கப்படாதிருப்பதை சபைக்கு அறிவிப்பது சொந்தக்காரரின் கடமையாதல்.

84ஈ. (1) ஏதேனும் கட்டிடத்தில் அல்லது இடத்தில் சபையால் அமைக்கப்பட்டுள்ள ஒரு நீர்மானி பழுது பார்க்கப்படாதிருந்தால் அதை உடனடியாகச் சபைக்கு அறிவிப்பது அத்தகைய கட்டிடத்தின் சொந்தக்காரரது அல்லது இருப்பாட்சியாளரது கடமையாதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் தன்மீது சுமத்தப்பட்ட கடமையைப் புரிவதற்கு வேண்டுமென்றே தவறும் அல்லது அசட்டை செய்யும் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

நீர்மானியை வாசிப்பதற்கென உட்பிரவேசிக்கும் அலுவலரைத் தடைசெய்தல்.

84உ. சபையினால் பொருத்தப்பட்ட நீர்மானியை வாசிக்கும் நோக்கத்திற்காக அச்சபையின் சார்பாக, சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ஏதேனும் கட்டிடத்தினுள் அல்லது வளவினுள் உட்பிரவேசிப்பதை நியாயமான ஏது இல்லாமல் தடைசெய்யும் எவரேனும் ஒருவர் அந்த ஆள் அதன் மீது தவறொன்றுக்கு குற்றவாளி ஆதல் வேண்டுமென்பதோடு, நீதவான் முன்னிலையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறைந்ததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

நீர்மானியை விடுத்து வேறொரு வழியால் நீர் பெறுவது தவறொன்றாதல்.

84ஊ. (1) ஒரு கட்டிடத்தின் அல்லது வளவின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் எவரும், அத்தகைய கட்டிடத்திற்கு அல்லது வளவிற்கு சபையினால் பொருத்தப்பட்ட நீர்மானியை விடுத்து வேறொரு வழியில் நீர் வழங்கலைப் பெறுவாராயின் அவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதவான் முன்னிலையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) பொது முகாமையாளர் அல்லது அவரால் அதன் சார்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், சபையினால் நீர்மானி பொருத்தப்பட்ட ஏதேனும் கட்டிடத்தின் அல்லது வளவின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளருக்கு ஒரு மணித்தியாலத்திற்கு குறையாத அறிவித்தல் கொடுத்ததன் பின்னர், காலை 6 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இடையில் எந்நேரத்திலும் அத்தகைய கட்டிடத்திற்கு அல்லது வளவிற்கு நீர்மானியை விடுத்து வேறொரு வழியில் நீர் வழங்கப்படுகின்றதா என ஆராய்ந்தறிவதற்கு, அத்தகைய கட்டிடத்திற்குள் அல்லது வளவிற்குள் உட்பிரவேசிக்கலாம்.

(3) ஏதேனும் கொடுக்கப்பட்ட கட்டிடத்திற்கு அல்லது வளவிற்கு வழங்கப்பட்ட நீரை அத்தகைய கட்டிடத்திற்கு அல்லது வளவிற்கு பொருத்தப்பட்ட நீர்மானியை விடுத்து வேறொரு வழியில் நீர் பெறப்படுகின்றதென பொது முகாமையாளரின் அல்லது அவரால் அதன் சார்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் திருப்திக்கு நிரூபிக்கப்பட்டிருக்குமிடத்து, பொது முகாமையாளர் அத்தகைய கட்டிடத்திற்கு அல்லது வளவிற்கான அதிகாரபூர்வமற்ற நீர் வழங்கலை உடனடியாக துண்டித்தல் வேண்டும்.

(4) எந்த ஆள் பொது முகாமையாளர் அல்லது அவரால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவுகளின் கீழ் தனது கடமைகளைச் செய்வதை நியாயமான ஏது இல்லாமல் எதிர்த்து அல்லது தடைசெய்யும் எவரேனும் ஆள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதவான் முன்னிலையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

நீர்மானியில் கையிடுதல் முதலியன தவறொன்றாதல்.

84எ. ஏதேனும் கட்டிடத்திற்கு அல்லது வளவிற்கு பொருத்தப்பட்ட ஏதேனும் நீர்மானியில் கையிடும், உடைக்கும், திறக்கும், மாற்றும், சேதப்படுத்தும் அல்லது வேறு ஏதேனும் முறையில் பிழையாக இடையூறு செய்யும் எவரேனும் ஆள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு, நீதிவான் முன்னிலையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

நீர்மானி முதலியன சபையின் ஆதனமாதல் வேண்டும்.

84ஏ. ஏதேனும் கட்டிடத்தில் அல்லது வளவில் பொருத்தப்பட்ட எல்லா நீர்மானிகளும் அதனுடன் அதன் எல்லாச் சேர்மானங்களும் சபையின் ஆதனங்களாக கருதப்படுதல் வேண்டும்.

நீர் விதிப்பனவிற்கு இருப்பாட்சியாளர் பொறுப்புடையவராதல்.

84ஐ. (1) சபையினால் நீர் வழங்கப்படுகின்ற ஏதேனும் கட்டிடத்தின் அல்லது வளவின் இருப்பாட்சியாளர் அத்தகைய கட்டிடத்திற்கு அல்லது வளவிற்கு வழங்கப்படும் நீர் தொடர்பாக விதிக்கப்படும் எல்லா விதிப்பனவுக்குமான கொடுப்பனவுக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(2) குறித்த கட்டிடத்தின் அல்லது வளவின் இருப்பாட்சியாளர் யார் என ஆராய்ந்தறிய சபையினால் முடியாதிருக்குமிடத்து பொது முகாமையாளர் எழுத்திலான அறிவித்தலொன்றைச் சொந்தக்காரருக்கு அனுப்பி, அவ்அறிவித்தல் கிடைக்கப்பெற்று 2 வார காலத்திற்குள் இருப்பாட்சியாளரின் பெயரை சபைக்கு வெளிப்படுத்தும்படி கோரலாம். சொந்தக்காரர் நியாயமான ஏது இல்லாமல் தேவைப்பட்ட காலத்திற்குள் தேவைப்பட்ட வெளிப்படுத்துதலைச் செய்யத் தவறுமிடத்து அவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதோடு நீதவான் முன்னிலையில் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன் மேல் நூறு ரூபா குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவைத் திருத்துதல்.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவு "அல்லது ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது மறியற்தண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற் தண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 97அ ஆம் பிரிவு என்றுற்போன்ற பயனை உடையதாதலும் வேண்டும் :— *முதன்மைச் சட்டவாக்கத்தில் 97அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*" தவறுகள் பிடியாணை இன்றி கைது செய்யத் தகுந்தனவாதலும் பிணையில் விடமுடியாதலவாதலும் வேண்டும்.*

97அ. இதற்கான அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டதும் மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்டதுமான எல்லாத் தவறுகளும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைக்கு முரணாகை எது எவ்வாறுயிருப்பினும்,

(அ) பிடியாணை இன்றி கைது செய்தகு தவறுகள், மற்றும்

(ஆ) பிணையில் விடமுடியாத தவறுகள்,

ஆக அச்சட்டத்தின் கருத்தமைவிற்குள்ளாகவும் அதன் நோக்கத்திற்காகவும் கருதப்படல் வேண்டும்.

36. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

37. முதன்மைச் சட்டவாக்கமானது, பின்வரும் அட்டவணையை அதன் முடிவில் சேர்த்துக் கொள்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தில் அட்டவணையைச் சேர்த்தல்.*

" அட்டவணை

(பிரிவு 97அ)

பிடியாணை இன்றி கைதுசெய்தகு மற்றும் பிணையில் விடமுடியாததுமான தவறுகள்

(1) 27அ ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழான தவறு.
(2) 31 ஆம் பிரிவின் கீழான தவறு.
(3) 32 ஆம் பிரிவின் கீழான தவறு.
(4) 33 ஆம் பிரிவின் கீழான தவறு.
(5) 34 ஆம் பிரிவின் கீழான தவறு.
(6) 36 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான தவறு.
(7) 38 ஆம் பிரிவின் கீழான தவறு.
(8) 54 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான தவறு.
(9) 62 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான தவறு.
(10) 66 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழான தவறு.
(11) 67 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான தவறு.
(12) 84இ ஆம் பிரிவின் கீழான தவறு.
(13) 84ஈ ஆம் பிரிவின் கீழான தவறு.
(14) 84உ ஆம் பிரிவின் கீழான தவறு.
(15) 84ஊ ஆம் பிரிவின் கீழான தவறு.
(16) 84எ ஆம் பிரிவின் கீழான தவறு.
(17) 91 ஆம் பிரிவின் கீழான தவறு.